பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

16 09 2026 WEDNESDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக அளவில் நிலவும் ஸ்திரமற்ற சூழலுக்கு மத்தியிலும், இந்தியா எழுச்சி பெற்று வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

2. சமஸ்கிருத மொழியின் செழுமையை தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

3. மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

4. தமிழகத்தில் சுவாசத் தொற்று பரவலை தடுக்கும்வகையில், பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து கொள்ளலாம் என்று மாநில அமைச்சர் டாக்டர். அருண்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்று, தொடரை கைப்பற்றியது.

>>>>>>>><<<<<<<<

உலக அளவில் நிலவும் ஸ்திரமற்ற சூழலுக்கு மத்தியிலும், இந்தியா எழுச்சி பெற்று வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்தியாவின் சுதந்திரமான நிலைப்பாடு மற்றும் சுயாட்சி நம்பிக்கையிலிருந்து ஏற்பட்டுள்ள பன்முகத்தன்மை காரணமாக, எழுச்சி பெறுவது உறுதி என்று கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் ராஜீய ரீதியிலான நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சியால் இந்தியாவின் திறன்கள் மற்றும் உலக அளவிலான தாக்கங்கள் ஸ்திரத்தன்மையுடன் நீடிப்பதாக டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

>>>>>>>><<<<<<<<

சமஸ்கிருத மொழியின் செழுமையை தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

செயற்கை நுண்ணறிவு தனியார் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து, சமஸ்கிருத ஏ.ஐ. மாதிரியை சென்னையில் வெளியிட்டு அவர் பேசினார்.

மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப, அனைத்து மொழிகளும் மேம்பாடு அடைய வேண்டியது அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

மொழிகளில் இடம்பெற்றுள்ள சிறப்பு அம்சங்களை இதுபோன்ற நவீன தொழில்நுட்பங்களுடன் இணைத்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

>>>>>>>><<<<<<<<

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நூற்றாண்டு கால அர்ப்பணிப்பை ஆவணப்படுத்தும் வகையில், அந்த அமைப்பின் சேவைகள் குறித்த டாக்டர் தமிழிசை சௌந்தரராஜனின் புத்தகம் அமைந்திருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நூற்றாண்டு கால சேவைகள் குறித்த புத்தகத்தை புதுதில்லியில் நேற்று, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்ட நிகழ்ச்சியில் தாம் பங்கேற்றதை சமூகவலைதளத்தில் டாக்டர் எல். முருகன் பதிவிட்டுள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தேசத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றிய சேவைகளையும், அதன் பணிகளையும் அறிந்து கொள்வதற்கு இந்த புத்தகம் முக்கியமான படைப்பாக அமைந்துள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

தனிநபர்களுக்கு இடையேயான UPI பணப்பரிவர்த்தனைகளுக்கு பரிமாற்றம் செய்யப்படும் தொகை எந்த அளவாக இருந்தாலும் எவ்வித கட்டணமும் கிடையாது என்று மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது.

வணிகர்களுக்கான இரண்டாயிரம் ரூபாய் வரையிலான பரிவர்த்தனைகளுக்கும், சிறுவணிகர்களுக்கு கட்டணம் ஏதுமின்றியும் UPI பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படும் என்று நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வணிகர்களிடம் செய்யப்படும் பரிவர்த்தனைகள் 96 சதவீதம் அளவுக்கும் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகாது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

இந்த தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், வேட்பு மனு தாக்கல் கடந்த 9ஆம் தேதி தொடங்கியது.

மனுக்கள் மீதான பரிசீலனை நாளை நடைபெறும்.

வேட்புமனுக்களை திரும்பப் பெற வரும் வரும் 19ஆம் தேதி கடைசி நாளாகும்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிடும் இடதுசாரி கட்சிகளின் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மதுராந்தகம் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சுகந்தியும், தாராபுரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் லஷ்மணனும் போட்டியிடுகின்றனர்.

>>>>>>>><<<<<<<<

தமிழகத்தில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக 10 தொழிற்பேட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாநில குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. மதன்ராஜா தெரிவித்துள்ளார்.

கோவை சிட்கோ தொழிற்பேட்டையை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. விக்னேஷுடன் இணைந்து ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனை தெரிவித்தார்.

பெண்களுக்கான தொழிற்பேட்டைகள் மூலம், அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று திரு. மதன்ராஜா கூறினார்.

பேட்டியின் போது உடனிருந்த அமைச்சர் திரு. விக்னேஷ், டாஸ்மாக் மதுபானக் கடைகளில் முறைகேடுகளில் ஈடுபடுவோர் 24 மணிநேரத்தில் இடைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

தமிழகத்தில் சுவாசத் தொற்று பரவலை தடுக்கும்வகையில், பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து கொள்ளலாம் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். அருண்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுவாசத் தொற்று பரவலை தடுக்க தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்து வருவதாக கூறினார்.

என்றாலும், காய்ச்சல் போன்ற பாதிப்புகள் இருந்தால், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருப்பதுடன், குழந்தைகளுக்கு காயச்சல் அறிகுறி இருந்தால் பள்ளிகளுக்கு அனுப்புவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் டெங்கு காய்ச்சல் சிகிச்சைக்கான வசதிகள் உள்ளதாகவும் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<<

தமிழ்நாடு - புதுச்சேரி பார் கவுன்சில் தலைவராக திரு. செஞ்சி கதிரவன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

கடந்த மார்ச் மாதம் 30ஆம் தேதி நடைபெற்ற பார் கவுன்சில் உறுப்பினர்களுக்கான தேர்தலில், 23 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

இரண்டு பெண் உறுப்பினர்களை சென்னை உயர்நீதிமன்றம் நியமித்தது.

இந்நிலையில், பார் கவுன்சில் தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று நடைபெற்றது.

தலைவர் பதவிக்கு திரு. செஞ்சி கதிரவனும், துணைத்தலைவர் பதவிக்கு திரு. பாலமுருகன் மற்றும் அகில இந்திய பார்கவுன்சில் உறுப்பினர் பதவிக்கு திரு. அமல்ராஜ் ஆகியோர் மட்டுமே மனுதாக்கல் செய்ததால், அவர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

>>>>>>>><<<<<<<<

தமிழகத்தின் நீலகிரி, கோவை உள்ளிட்ட 6 மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் இடிமின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு, திருச்சி, திருப்பூர், பெரம்பலூர், தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் மாலை அல்லது இரவு நேரங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

இருவரிச் செய்திகள்

நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 399 ஆக அதிகரித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

பங்களாதேஷில் கடந்த 2024ஆம் ஆண்டு வன்முறையை ஏவிவிட்டதாக அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த 7 பேருக்கு மரண தண்டனை விதித்து, சர்வதேச தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

மாநிலங்களவை துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஸ் தலைமையிலான இந்திய நாடாளுமன்ற குழுவினர், தென்னாப்பிரிக்காவின் கேப்டவுனில் நடைபெறும் காமன்வெல்த் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>>>><<<<<<<<

அகர்தலாவிலிருந்து நேற்று மாலை தில்லி புறப்பட்ட விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதன் காரணமாக, லக்னோ விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

>>>>>>>><<<<<<<<

கோ-ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு விற்பனையை தஞ்சாவூரில் மாவட்ட ஆட்சியர் திருமதி. ரேவதி நேற்று தொடங்கி வைத்தார்.

>>>>>>>><<<<<<<<

கன்னியாகுமரி மாவட்ட எல்லையான சித்திரங்கோடு சோதனைச் சாவடியில் காவல் கண்காணிப்பாளர் திரு. அன்சுல் நாகர் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>>>><<<<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் கல்வி நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்கு அருகே போதை மற்றும் புகையிலைப் பொருட்கள் விற்பனை குறித்து தெரியவந்தால், பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என்று ஆட்சியர் திருமதி. கவிதா தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

தென்காசி நகரின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் நேற்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அங்குள்ள சிற்றாற்றில் கரைக்கப்பட்டன.

>>>>>>>><<<<<<<<

சென்னை, தாம்பரம் நகராட்சியில் நடைபெற்றதாக கூறப்படும் டெண்டர் முறைகேடு புகாரைத் தொடர்ந்து, ஆணையர் திரு. பாலச்சந்தர் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டார்

>>>>>>>><<<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்று தொடரை கைப்பற்றியது

தில்லியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்திய அணி, பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதனையடுத்து, முதலில் விளையாடிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்தது.

160 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 14 புள்ளி 3 ஓவரிலேயே 3 விக்கெட் இழப்பிற்கு 163 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

தொடக்க ஆட்டக்காரர்களான சஞ்சு சாம்ஸன் அபாரமாக ஆடி 57 ரன்னும், அபிஷேக் சர்மா 39 ரன்னும் சேர்த்தனர். இசான் கிஷன் 38 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் ஆட்டத்தில் ஏற்கனவே வென்றுள்ள இந்தியா, நேற்றைய வெற்றியின் மூலம் 2-0 என்ற கணக்கில் தொடரை வென்றது.

>>>>>>>><<<<<<<<